<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
**I.A.3/2024**
**in**
**HMOP.No.232/2022.**

பெயர் : கிஷோர்குமார்

த/பெ. : திருப்பதி.

தேதி : 18.02.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>:-

உங்களுடைய கல்வித்தகுதி என்ன என்றால், என்னுடைய கல்வித்தகுதி M.Sc., Ph.d(Physics) படித்துள்ளேன். என்னுடைய சட்ட அறிவு எந்த அளவிற்கு உள்ளது என்று என்னால் கூற இயலுமா என்றால் இந்த கேள்வி இந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாமல் உள்ளது. நான் இந்த மனு எந்த சட்டப்பிரிவின் கீழ் தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. நீங்கள் தாக்கல் செய்துள்ள Counter Claim petition Sec 12 (1-b) of Hindu Marraige Act ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியுமா என்றால் சரிதான். இந்த பிரிவிற்கு சட்டரீதியாக ஒரு விளக்கம் உள்ளது தெரியுமா என்றால் அதுப்பற்றி எனது வழக்கறிஞருக்கு தெரியும். இந்த வழக்கு பிரிவு திருமணத்தின் போது spouse ஆக இருக்கக்கூடிய யாருக்கும் மனநிலை சரியில்லாதது குறித்து அந்த சட்டப்பிரிவு கூறப்படுகிறது என்பது பற்றி தெரியுமா என்றால் தெரியும். தற்போது விளக்கம் கூறிய பிறகுதான் தெரியுமா அல்லது ஏற்கனவே இது குறித்து தெரியுமா என்றால் நான் மனு தாக்கல் செய்யும்போதே தெரியும். என்னிடம் தற்போது காட்டப்படுவது நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்ட Counter Claim Petitionன் சான்றிட்ட நகலாகும். இதில் உள்ள மனுதாரரின் கையொப்பம் எங்கு உள்ளது என்று காட்ட இயலுமா என்றால் காட்ட இயலும். 1லிருந்து 20 பக்கம் உள்ள Counter Claim Petition ல் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் பக்கம் 19, 20ல் மட்டும் உள்ளது. 1லிருந்து 18 பக்கத்தில் என்னுடைய கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. 1லிருந்து 18 பக்கம் நான் கையொப்பம் போடாததற்கு ஏதேனும் காரணம் உள்ளதா என்றால் அந்த நிரூபண வாக்குமூலம் எனக்கு தெரிந்துதான் தயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். நான் கையொப்பமிட்டது 19, 20 பக்கத்தில் மட்டும் தான்.

என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மூன்று

ஆவணங்கள் மட்டும் தான் இந்த வழக்கு சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இதுமட்டும் கிடையாது. வழக்கிற்கு தேவைப்பட்டால் மேலும் ஆவணங்கள் தாக்கல் செய்யப்படலாம். ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ள Counter Claim மனுவில் ஆவணப்பட்டியலில் குறிப்பிட்டப்பட்டுள்ள மூன்று ஆவணங்களிலிலேயே ஏதேனும் மருத்துவர் அறிக்கை, மனநிலை சிறப்பு நிபுணர் அறிக்கை ஏதேனும் இத்தோடு சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிருபண வாக்குமூலத்தோடு தாக்கல் செய்த ஆவணப்பட்டியலில் முதலாவது ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ள Marimonial ID ல் யாரேனும் அல்லது யாருக்கோ மனநிலை பாதிக்கப்பட்டவர் என்ற குறிப்பு அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் நிருபண வாக்குமூலத்தில் ஆவண பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 2வது ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தில் யாரேனும், யாருக்காவது மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது என்ற குறிப்பு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் நிருபண வாக்குமூலத்தில் ஆவண பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள 3வது ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ள Train Ticket–ல் யாரேனும் அல்லது யாருக்காவது மனநிலை பாதிக்கப்பட்டுள்ளது என்ற குறிப்பு குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இந்த வழக்கிற்கு அது சம்பந்தமில்லாத கேள்வியாகும்.

எதிர்மனுதாரர் உங்களை எப்போது பார்க்க வந்தார் என்றால் ஆகஸ்ட் மாதம் 2023ஆம் தேதியில் நான் வேலை செய்யும் Indian Instritute of Science of Challekere Campusற்கு எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரரின் அம்மாவுடன் வந்தீர்கள். எதற்காக வந்தார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் அவர்கள் என்னை தொந்தரவு செய்வதற்காக வந்தார்கள். ஏதோ ஒரு ஆவணத்தை எடுத்துவந்து அதில் கையெழுத்து இடுமாறு கேட்டு 3 மணி நேரமாக எனது அலுவலகத்தின் மெயின் கேட் செக்கியூரிட்டு இருக்கும் இடத்திலேயே இருந்தார்கள். அப்போது எதிர்மனுதாரர் எனது மனைவியோ அல்லது மனைவியின் தாயாரோ ஏதேனும் அடித்தார்களா அல்லது ஏதேனும் கைகலப்பு நடந்ததா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த Counter Claim Petition எப்போது, எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 01.04.2023 அன்று தாக்கல் செய்தேன். Counter Claim Petition எந்த காரணத்தினால் 5 மாதம் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு இந்த ஊரில் வழக்கறிஞரை தேடி அவர்கள் மூலமாக

தாக்கல் செய்ய காலதாமதம் ஆனது. இந்த வழக்கு பிரிவின் கீழ் தான் தாக்கல் செய்யவேண்டும் என யார் அறிவுறுத்தினார்கள் என்றால் நான் இந்த வழக்கு சம்பந்தமா எனது வழக்கறிஞர் கேட்டபோது நான் அளித்த பதிலின் அடிப்படையில் வழக்கறிஞர் அறிவுறுத்தலின் பெயரில் நான் இந்த மனுவை தாக்கல் செய்தேன்.

இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட தேதியில் எதிர்மனுதாரர் உங்கள் மனைவிக்கு ஏதேனும் மருத்துவ அறிக்கை அல்லது மனநிலை மருத்துவர் அறிக்கை ஏதேனும் உள்ளது என்று சொன்னீர்களா என்றால் என்னிடம் அவ்வாறு மருத்துவ அறிக்கை இல்லை. இது குறித்த மருத்துவ அறிக்கை தற்போது ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிர்காலத்தில் ஏதேனும் மருத்துவ அறிக்கை என்னிடம் உள்ளது என்று என்னால் தாக்கல் செய்ய இயலுமா என்றால் என்னிடம் எந்த அறிக்கையும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள Counter Claim Petitionல் Cause of Action எங்கு உள்ளது என்று காட்ட இயலுமா என்றால் பக்கம் 8 பாரா எ, பக்கம் 9 பாரா ஏ, பக்கம் 10 பாரா ஐ, பக்கம் 12 பாரா ஒ, பக்கம் 12 ஓ, பக்கம் 8லிருந்து பக்கம் 18 வரை உள்ளது. இந்த நிருப்ண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறியுள்ள Cause of Action க்கு தொடர்புடைய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. ஆனால் உள்ளது. என்ன உள்ளது என்று கூற இயலுமா என்றால் இயலும். எதிர்மனுதாரர் அவரது அப்பாவின் இரண்டாம் மனைவியின் மகள் என்ற விபரத்தை திருமணத்திற்கு முன்பு தெரிவிக்கவில்லை. இதுவே ஏமாற்றப்பட்டதற்கு முதல் காரணம். எதிர்மனுதாரருக்கு திருமணத்திற்கு முன்பு அண்ணாமலை மருத்துவ பல்கலை கழகத்தில் அனைத்து பற்களையும் பிடுங்கி மீண்டும் நடப்பட்டு அந்த வலி தாங்கமுடியாமல் அவர் தற்கொலைக்கு முயன்றதாக அவர்எ ன்னிடம் கூறியுள்ளார். மேலும் அவரது தலைமுடி V Careற்கு சென்று நடப்பட்டுள்ளதாக அவரே என்னிடம் கூறினார். மேலும் எதிர்மனுதாரருக்கும் அவரது அண்ணன் (எதிர்மனுதாரரின் அப்பாவின் முதல் மனைவியின் மகன்) மேஜர் ஸ்ரீதர் என்பவருக்கும் பெங்களூரில் உள்ள குடும்ப சொத்து சம்பந்தமாக பெங்களூரில் உள்ள நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்று வருகிறது. இதுபோன்ற இவர்களுடைய குடும்ப பின்புலம் பற்றி எதுவும் திருமணத்திற்கு முன் தெரிவிக்கவில்லை. திருமணத்தன்று எதிர்மனுதாரர் தரப்பில் திருமணத்திற்கு வெறும் 5 நபர்கள் மட்டுமே வந்திருந்தார்கள். அது சம்பந்தமாக கேட்டதற்கு மாலை வரவேற்பு நிகழ்ச்சிக்கு வருவார்கள் என்று கூறியிருந்தார்.

ஆனால் அதுவும் பொய் மாலை நிகழ்ச்சியில் யாரும் வரவில்லை.

திருமணம் நடந்ததே அவருடைய குடும்ப பின்னனி மற்றும் அவரது உடல்நிலை மற்றும் மனநிலையை மறைத்து திருமணம் செய்துள்ளார். இதுப்பற்றிய விபரம் தெரியவந்ததும் இவருடைய முதல் மனுவில் நான் ஆண் மகனே இல்லை என்று மனுத்தாக்கல் செய்து திருமணத்தை செல்லத்தக்கதல்ல என்று தாக்கல் செய்தார். அதற்கான எதிர்கோரல் மனுவில் எல்லா தகவல்களையும் நான் கொடுத்துள்ளேன். மேலும் இவர் தாக்கல் செய்த முதல் மனுவில் திருமணத்திற்காக வீட்டு சாமான், இருசக்கர வாகனம் எல்லாம் தந்ததாக அவர் தெரிவித்துள்ளார். ஆனால் இதுவரை அதற்கு எந்த நிரூபணமும் அவர் கொடுக்கவில்லை. இதை எல்லாம் தெரிவித்த எதிர்மனுவில் இன்று வரை எந்த பதிலும் பதிவு செய்யவில்லை. வழக்கினை ஒரு வருடத்திற்கு மேலாக நடத்திவிட்டு நான் கேட்ட அவருடைய குடும்ப பின்னனி மற்றும் அவரது உடல்நிலை பற்றி ஒரு பதிலும் இல்லை. மேலும் இவரது முதல் மனுவில் அவரது தந்தை இந்நிலையில் இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டார். ஆனால் அவரது தந்தை இறந்து 10 ஆண்டுகள் ஆகிறது. தவறு, தவறாக அவரது மனுவில் விபரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர் பணி செய்யும் இடத்திற்கு வந்தார் என்பது உண்மை வீடியோ ஆதாரங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் என்னையும் எனது வழக்கறிஞரையும் பற்றி அவரது அலைபேசியிலிருந்து அவதூராக அனுப்பிய குருஞ்செய்தி இன்றும் என்னிடம் உள்ளது. நீதிமன்றம் கோரும்போது தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன்.

என்னிடம் காட்டப்படும் Counter Claim Petitionல் பக்கம் 18 பாரா 4ல் "மனுதாரர் இந்த நீதிமன்ற அதிகார எல்லையில் வசிப்பதாலும் மேற்கண்ட மனுவினை எதிர்மனுதாரருக்கு எதிரிாக இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அது நிலுவையில் இருப்பதாலும் இந்த எதிர்கோருரிமை மனுவினை இந்நீதிமன்றத்தில் பணிவுடன் தாக்கல் செய்கிறார்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மறுவிசாரணை இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.